**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.134/2016 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.2 |
| Name | : | செல்லம்மாள் |
| Father's Name/Husband Name: | | சஞ்சீவி |
| Village | : | சிலோன் காலணி, கீழப்புலியூர், |
| Taluk | : | குன்னம் |
| Age | : | 75/ 2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.11.2024

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**(எதிரிகள் 1– தேவி, 2 கிருஷ்ணமூர்த்தி ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**எதிரிகள் தரப்பில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்குவிசாரணை செய்ய கு.வி.மு.ச. பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு குற்ற பல்வகை மனு எண். 1504/2024 ஆனது 11.09.2024ம் தேதி அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை**

1(i) நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைதான் போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். தர்மதுரை எனது மகன் என்றால் சரிதான். தேவிக்கும் தர்மதுரைக்கும் திருமணமாகி எங்கள் ஊரில்தான் குடியிருந்து வந்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். தர்மதுரையும், தேவியும் திருமணமாகி திருச்சி புறத்தாக்குடியில் இருந்தார்கள் என்று சொன்னது தவறானது என்றால் சரிதான். எனது மகன் எனது மருமகள் தேவியை சந்தேகப்பட்டு அடிக்கடி அடித்து கொடுமை படுத்துவார் என்றால் சரியல்ல. எனது மகனுக்கு ஆண் வாரிசு வேண்டும் என்பதால் முதல் குழந்தை பெண்ணாக

பிறந்துவிட்டதால் தேவியை அடித்து கொடுமை படுத்தினார் என்றால் சரியல்ல. எனது மருமகளை அடித்து விரட்டிவிட்டு எனது மகனுக்கு இரண்டாவது திருமணம் செய்துவிட்டோம் என்றால் தேவி கிருஷ்ணமூர்த்தியுடன் சென்று பிள்ளை பெற்றுக்கொண்ட 10 வருடம் ஆகிறது. எனது மகனுக்கு கடந்த 1 1/2 வருடங்களுக்கு முன்புதான் திருமணம் செய்தோம். எனது மகன் தேவிக்கு நகை மற்றும் பணம் அனுப்பிய விபரம் எனக்க நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. எனது மருமகள் தேவிக்கு திருமணத்தின்போது, அவரது பெற்றோர்கள் தான் சீதனமாக நிலம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. எனது மகன் பெண் குழந்தை பிறந்ததால் 1ம் எதிரியை தேவியை விட்டுவிட்டதால் வறுமையின் காரணமாக தேவி நிலத்தை விற்றுவிட்டார் என்றால் சரியல்ல. எனது மகன் எதிரிகளின் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றாலும், அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-
District Munsif Cum Judicial Magistrate,
Veppanthattai,
(FAC) Additional Mahila Court,
Perambalur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.134/2016 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.1 |
| Name | : | தர்மதுரை |
| Father's Name/Husband Name: | | சஞ்சீவ் |
| Village | : | கீழப்புலியூர், |
| Taluk | : | குன்னம் |
| Age | : | 44/ 2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.11.2024

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**(எதிரிகள் 1– தேவி, 2 கிருஷ்ணமூர்த்தி ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.ச. பிரிவு 317ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**எதிரிகள் தரப்பில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்குவிசாரணை செய்ய கு.வி.ச. பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு குற்ற பல்வகை மனு எண். 1504/2024 ஆனது 11.09.2024ம் தேதி அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை**

1(i) எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். இதற்கு முன்பு நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரிதான். 1ம் எதிரி தேவி எனது முன்னாள் மனைவி என்றால் சரிதான். 1ம் எதிரி மற்றும் 2ம் எதிரிகள் மீது எந்த ஆண்டு புகார் கொடுத்தேன் என்றால் சரியாக நியாபகம் இல்லை 2013 என்று நினைக்கிறேன். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலீசார் என்னை விசாத்தார்களா என்றால் விசாரித்தார்கள். அதன் அடிப்படையில்தான் வழக்கு பதியப்பட்டுள்ளதா என்றால் அந்த வழக்கின் விபரம் எல்லாம் எனக்கு தெரியவில்லை. நான் கொடுத்த புகாரில் போலீசார்

எதுவும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று முதல் விசாரணையிலும், அ.சா.ஆ.1 புகாரிலும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. போலீசார் புகாரை எடுத்துக்கொண்டு விசாரணை செய்தார்கள். நான் கூறியதுபோல் எந்த சம்பவத்தை விசாரிக்கவில்லை என்றாலும், அவர்கள் நடவடிக்கைகள் எடுக்காமல் மேல் அதிகாரிகளிடம் சொல்லிதான் பின்னிட்டு நடவடிக்கை எடுத்தார்கள் என எனது புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் எந்த சம்பவம் என்று எனக்கு புரியவில்லை. 1ம் எதிரி தேவி மீதும், கிருஷ்ணமூர்த்தி மீதும் எத்தனை புகார் கொடுத்தேன் என்றால் எனது மனைவி வேறு நபருடன் தகாத உறவு வைத்துள்ளார் என்று வெளிநாட்டில் இருந்து வந்தவுடன் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தேன். பின்னிட்டு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தேன். எந்த தேதியில் எந்த வருடத்தில் கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது என்றால் 2010ம் ஆண்டு , 2013ம் ஆண்டு ஆகிய ஆண்டுகளில் கொடுத்தேன்.

1(ii) 1ம் எதிரி தேவி மீது அடிக்கடி சந்தேகப்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுப்பது எனக்கு வழக்கம் என்றால் சரியல்ல. எனக்கும் 1ம் எதிரி தேவிக்கும் 10.02.2006 அன்று திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்பு 29.09.2007ம் ஆண்டு லால்குடி மருத்துவமனையில் எங்களுக்கு பெண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். பெண் குழந்தை பிறந்ததால் அவர்களை பராமரிக்காமல் சந்தேகப்பட்டு வெளிநாட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் வெளிநாட்டிற்கு சென்றது உண்மை சந்தேகப்படவில்லை. 1ம் எதிரியான எனது மனைவி தேவியை சந்தேப்படவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 2007ம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளிநாடு சென்றேன் என்றால் சரிதான். 1ம் எதிரி தேவிக்கு வெளிநாட்டிலிருந்து நகை பணம் அனுப்பியதற்கு அத்தாட்சியாக ஆவணங்களை போலீசாரிடம் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி தேவி பெயரில் சீதனமாக ஒரு நிலத்தை அவரது பெற்றோர்கள் எழுதி வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய உழைப்பில்தான் அந்த நிலம் வாங்கப்பட்டது. என்னுடைய உழைப்பில் வாங்கப்பட்டதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனைவி என்பதால் நான் நம்பிக்கையின் பேரில் பணத்தை வெஸ்டர்ன் யூனியன் மணி ட்ரேன்ஸ்வர் மூலமாக அனுப்பி வைத்தேன். அதற்கு அத்தாட்சியாக நான் இரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

1(iii)திருமணத்திற்கு முன்பே எனக்கு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு இருந்ததால் எனது மனைவி தேவியை நான் சந்தேகப்பட்டு வந்தேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரியும், 2ம் எதிரியும் தவறான தொடர்பில் இருந்ததை நான் நேரடியாக பார்த்ததை புகாரில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கும், 2ம் எதிரிக்கும் எந்த இடத்தில் எந்த தேதியில் திருமணம் நடந்தது என்று புகாரிலோ போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி தேவி 2ம் எதிரியுடன் எந்த ஊரிலிருந்து ஓடிப்போனார் என்று புகாரிலோ போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். இதற்கு முன்பு நீதிமன்றத்தில் அளித்த முதல் விசாரணையில் 2013ம் வருடம் மார்ச் 7ம் தேதி எனது மனைவி எனது குழந்தையுடன் ஓடிவிட்டார் என்ற விபரத்தை புகாரிலோ போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஓடிவிட்டார் என்று சொல்லியுள்ளேன். குழந்தையோடு ஓடிவிட்டார் என்று சொல்லவில்லை. எனது மனைவி இரண்டாவதாக கற்பமாக இருந்ததாகவும், அதுவும் பெண் குழந்தை என்று நான் தெரிந்து கொண்டு நான் அடித்து விரட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. அதனால்தான் என்னிடம் இருந்து என் மனைவி குழந்தையுடன் சென்றுவிட்டார் என்றால் சரியல்ல.

1(iv)03.06.2013ம் தேதி மனைவி வேண்டாம் என்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். இரண்டாம் திருமணம் செய்ய வேண்டும் என்ற நோக்கிலேயே எனது மனைவியை நான் அடித்து விரட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. பின்னிட்டு வேண்டுமென்றே விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து ஒருதலைபட்சமாக உத்தரவு பெற்றுள்ளேன் என்றால் உத்தரவு பெற்றுள்ளது உண்மைதான் ஆனால் அடித்து துன்புறுத்தவில்லை. நான் வெளிநாட்டிலிருந்து என் மனைவியான 1ம் எதிரிக்கு எந்த பணமும் அனுப்பவில்லை என்றாலும், அவர் எந்த வித நம்பிக்கை மோசடியும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 2013ம் வருடம் 1ம் எதிரி தேவிக்கு பெண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி தேவிக்கு அவரது பெற்றோர்கள் சீதனமாக கொடுத்த நிலத்தை தான் விற்றார் என்றால் சரியல்ல. செல்லம்மாள் எனது தாயார் என்றாலும், காமராஜ் எனது அண்ணன் என்றாலும் சரிதான். நான் கொடுத்த பொய்யான புகாரில் எனக்கு வேண்டியவர்களை நான் சாட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக புகார் கொடுத்து பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-
District Munsif Cum Judicial Magistrate,
Veppanthattai,
(FAC) Additional Mahila Court,
Perambalur.